1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

வரையறுத்த லிற்றோ காஸ் கம்பனியின் ("கம்பனி") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடச்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5. நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமங்களற்கான குறிப்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் முற்பண கொடுப்பனவு ரூபா 379,304,519 ஆக உள்ளது. 2024 திசெம்பர் 31 இல உள்ளவாறு ரூபா 67 மில்லியன் தொகையான ஒன்று முதல் பன்னிரண்டு ஆண்டுகளான நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்றது என அவதானிக்கப்பட்டது. ஆகவே, அந்த முற்பணங்களின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தது. எவ்வாறாயினும், LKAS 36 –	கம்பனியானது தனியார் மயப்படுத்தல் மற்றும் வருடாந்த சந்தாக்கள் மற்றும் முற்செலுத்தல்களிற்காக ஒட்சிசன் சிலிண்டர்கள், விளம்பர செலவினங்கள் தொடர்பான சட்டப் பிரச்சனைகளிற்காக மீள் தீர்வுகள் பின்தொடரப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் திணைக்களம் தீர்வுகள் பின்தொடரப் பட்டுள்ளதுடன் கடன் தள்ளுப இறுதி சட்ட குறைபாட்டின் அடிப்படையில்	நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டப்பட்டுள்ளது.

சொத்துக்களின் கடன் தள்ளுபடிக்கான ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த முற்பணங்களிற்காக தள்ளுபடிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்திற்கொள்ளப்படும். கம்பனியானது அறவீடுகளை தீர்மானிப்பதற்கு அதிகாரிகளுடன் ஈடபட்டுள்ளது.

1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 12 இன் பிரகாரம், கம்பனியின் PPE கொள்கை ஆரம்பத்தில் முலதன WIP கணக்கில் சகல நிலையான சொத்து கொள்வனவுகளையும் பதிந்திருந்ததுடன் பின்னர் உரிய நிலையான சொத்துக் கணக்கிற்கு ஒவ்வொரு காலாண்டிலும் அந்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டது. எவ்வாறாயினும், மூலதன WIP கணக்குகள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்காமல் ஐந்து அண்டுகளிற்கு மேலாக மூலதனமாக்கப்படாத மீதிகள் ரூபா 13,926,589 ஆக உள்ளது.	கம்பனியானது மூலதன நடைபெறும் வேலையின் கீழ் ரூபா 17.6 மில்லியன் உள்ளடங்க 2025 இன் Q1 இல் சொத்துக்களை போல களஞ்சியப்படுத்தும் தொட்டிகள் மற்றும் ஆவியாக்கிய தொட்டிகள் மூலதனமாக்கப்பட்டது. ERP மற்றும் புவியியல் புலனாய்வு செலவுகள் நிதிக்கூற்றுக்களிற்கு சாட்டுதல் செய்யப்பட வேண்டியிருந்ததுடன் மிகுதியாக இருக்கின்ற மீதிகள் சரியான அறிக்கையிடலிற்காக மீளாய்வின் கீழ் உள்ளது.	கம்பனியானது உரிய காலத்தில் பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்களை இனங்காண்பதற்கு ஒழுங்கான WIP கணக்கினை மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் பிரயோகிக்கக்கூடிய கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய PPE ஐ மூலதனமாக்கப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி (PAL) ரூபா 50.6 மில்லியனாக இருந்தது. இந்த தொகை 2013, 2019, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் LP காஸ் இறக்குமதி செய்யும் நேரத்தில துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிக்காக முறையே ரூபா 15.5 மில்லியன், ரூபா 31.4 மில்லியன், ரூபா 3.4 மில்லியன் மற்றும் ரூபா 0.26 மில்லியன் கொடுப்பனவுகளைக் கொண்டுள்ளது. இந்த கொடுப்பனவுகள் பல்வேறு காரணங்கள் காரணமாக பின்னர் இரத்து செய்யப்பட்டிருந்ததென கப்பலேற்றுகைகளிற்காக செய்யப்பட்டீரந்தன. கம்பனியானது ரூபா 15.5 மில்லியன் மாத்திரம் கடன் தள்ளுபடி ஏற்பாடுகளிற்காக	கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரத்து செய்யப்பட்ட LPG கப்பல ஏற்றுகைகளில் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக பெறவெண்டிய PAL ரூபா 50.6 மில்லியனாக இருந்தது. கம்பனியானது மிகுதியாக இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு இலங்கை சுங்கத்துடன் இணைந்து செயற்பட்டுள்ளது. ஆனால், பெறவேண்டிய இருக்கின்ற PAL இற்காக கடன் தள்ளுபடி செய்யாமையின் விளைவால் அறவிடாமையை குறிப்பதற்கு சுங்கத்திலிருந்து முறையான தகவல் பரிமாற்றம் எதுவும் பெற்றிருக்கவில்லை.	நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டப்பட்டுள்ளது.

செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதியாக இருக்கின்ற தொகைகள் இன்னமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், LKAS 36 – சொத்துக்களின் கடன் தள்ளுபடிக்கான ஏற்பாடுகளின் பிரகாரம். ஏனைய மீதிகளிற்காக கடன் தள்ளுபடி ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை		

1.6.2. முற்பணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
இந்த கணக்கு சர்வதேச வியாபார தெளிவாக்கல் நோக்கங்களிற்காக முற்பண கொடுப்பனவுகளை கொண்டிருந்தது. மேற்குறித்த மீதிகள் 2017 இலிருந்து ரூபா 5.5 மில்லியன் நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற முற்பண கொடுப்பனகளாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் முற்பணக் கொடுப்பனவுகள் நியாயமான காலத்திற்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்ததுடன் ஒழுங்காக இணக்கம் செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், முற்பண தீர்பனவு நடைமுறை, முறையான கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடைமுறை என்பன இன்மையால் இந்த தொகை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சாத்தியமானளவு நிதித் தவறுகள் நிதி நட்டங்களை விளைவித்தமையால் தீர்ப்பனவு செய்யப்படாது இருந்தது,	கம்பனியானது கேள்வு முன்வைப்பாளர்கள் மற்றும் இறக்குமதி செய்கின்ற LPG சிலின்டர்களை அகற்றும் முகவர்களிற்கு கொடுப்பனவுகள் தாமதப்பட்டமையால் ரூபா 5.5 மில்லியன் மீதிகள் நிலுவையாக இருப்பதற்கு முகம்கொடுத்தது. கொள்வனவு மற்றும் நிதித் திணைக்களம் 2025 இற்கு முன்னர் அந்த மீதிகளை இணக்கம் செய்வதற்கு கவனம் செலுத்துகின்றது.	நிலுவையாக இருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையால் வழங்கப்பட்ட அரசு உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான (SOEs) செயற்பாட்டுக் கைநூல்	கைநூலின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம், கமபனியானது 2024 திசெமபர் 31 இல் உள்ளவாறான ரூபா 13,303,412,495 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் மீதான வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	நாங்கள் 2024 ஒக்தோபரில் 2024 இல் முடிவடைந்த அண்டிற்கான நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்வதற்கு பக்கர் ரில்லி அன்ட் கம்பனிக்கு வேலையை வழங்கியிருந்தோம். இதன்படி, அவர்கள் கள வேலையை	கம்பனியானது றூஸ்ட் சொத்து முகாமைத்துவ முறைமையை உறுதிப்படுத்துவதற்கு வருடாந்த சொத்து மெய்மையாய்வு அமுலாக்கப்பட வேண்டும்.

			பூர்த்தியாக்கியிருந்ததுடன் தற்போது இணக்கம் செய்யும் வேலையை செய்கின்றனர். நாங்கள் இறுதி அறிக்கைக்காக காத்திருக்கின்றோம் நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கை பெற்ற பின்னர் கணக்காய்விற்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும். கம்பனி வருடாந்த அடிப்படையில் ஒவ்வொரு களஞ்சியங்களிலும் வருடாந்த இருப்பு மெய்மையாய்வை நாங்கள் நடாத்து கின்றதுடன் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கா ஏற்கனவே நடாத்தப் பட்டிருந்ததுடன் ஈமெயில் மூலம் அரசாங்க கணக்காய்வாளர்களிற்கு அறிவித்திருந்தோம்.	
(ஆ) அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் இணைப்பு IV	நிதிக்கூற்றுக்கள் சபையின் அனுமதிக்கு முன்னர் கணக்காய்வு குழுவின் (AC) நோக்கெல்லையின் கீழ் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்கின்றது. எவ்வாறாயினும், கம்பனியானது சபை அனுமதிக்கும் முன்னரே அவர்களுடைய மீளாய்விற்கு AC இற்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.		அவதானிப்புகளை முறையாக ஏற்றுக் கொள்கின்றோம். கம்பனியானது சபை அனுமதிக்கும் முன்னரே அவர்களுடைய மீளாய்விற்கு கணக்காய்வு குழுவிற்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தலை ஏற்றுக் கொண்டது. இதன்படி நல்லாளுகையை பின்பற்றுவதுடன் இணங்கி இந்த நடைமுறை 2025 ஆம் ஆண்டிலிருந்து முறைப்படி பின்பற்றப் பட்டுள்ளது.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.
(இ) 2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015, 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய PED 1/2015(I) மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 1/2015(ii) ஆம் இலக்கங்கள் கொண்ட பொது முயற்சிகள்	(i) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட பதவியை கொண்டிருந்த உத்தியோகத்தர்கள் அர்த்தப்பட்டிருந்ததுடன் SOE எந்தவொரு HM 1-1 வகுதிக்கு சமமான அலலது மேற்பட்ட		உங்களுடைய வினாவில் குறிப்பிடப்பட்ட 33 உத்தியோகத்தர்கள் வேலை தரம் 05 (JG 05) ஊழியர்களாக உள்ளதுடன் மேற்குறிப்பிட்ட கம்பனியினுடைய கார் கொள்கை பிரகாரம்	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

திணைக்கள சுற்றறிக்கைகள்	பதவியுடையவர் மாதாந்தம் 115 லீற்றர் முதல் 145 லீற்றர் வரை எரிபொருள் படியை பெறுவதற்கு தகுதியுடையவர். அந்த ஏற்பாடுகளிற்கு முரணாக 33 உத்தியோகத்தர்கள் மேற்குறிப்பிடப்பட்ட ஆகக் கூடிய எல்லையுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 12,789,432 பெறுமதியான 33,374 லீற்றர் மிகையான எரிபொருளை பயன்படுத்தியிருந்தனர்	அந்த ஊழியர்கள் அவர்களுடைய போக்குவரத்து தேவையை செய்வதற்கு எரிபொருள் படிக்காக தகுதிபெற்றள்ளனர். கம்பனியானது கம்பனி பராமரித்த வாகனங்களை வழங்கியிருக்கவில்லை.	
	ii) கம்பனியானது மீளாய்வாண்டின் போது எரிபொருள் படிக்காக தகுதிபெற்றிருக்காத 33 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 26,168,973 பெறுமதியான 66,187 லீற்றர் மாதாந்த எரீபொருள் படியை வழங்கியிருந்தது.	சகல 33 பட்டியலிட்ட உத்தியோகத்தர்களும் கம்பனி கார் கொள்கையின் கீழ் எரிபொருள் படிகளிற்காக தகுதியுடையவர்கள். களநிலை, தொடர்புபட்டவர் கடமைகளில் 28 பேர் நேரடியாக ஈடுபட்டவர்களாகும் விற்பனை மற்றும் ர்ளுநு பணிப்பாளர்கள் அவர்களுடைய தனிப்பட்ட வெளித்தேவைக்கு பயன்படுத்துகின்றனர் மற்றும் மாதாந்த கலந்துரையாடல்கள் பேணப்படுகின்றன. எரிபொருள் படி மற்றும் வாகனப்படிகள் அனுமதிக்கப்பட்ட கம்பனிய கார் கொள்கை அடிப்படையில் கடுமையாக உள்ளன. PED சுற்றறிக்கை இருக்கவில்லை. சாரதி படிகள் கம்பனி சராதியை வழங்காத தகுதியுடைய உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டது. சகல செலவுகளும் வருடாந்தம் பாதீடு	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

			செய்யப் படுகின்றதுடன் வருடாந்த நிதிக்கூற்றுகளிற்காக வழங்கபப்ட இறுதி பங்குதாரர் அனுமதியுடன் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது.	
(ச)	2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015 ஆம் இலக்க மற்றும் 2016 ஒக்தோர் 27 ஆந் திகதிய PED 01/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்	உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகுதி பெற்ற உத்தியோகத்தர் அப்பதவிக்குரிய அலுவலக வாகனங்களை பயன்படுத்துவதற்கு அல்லது ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்து படியை பெறுவதற்கு சந்தர்ப்பமுள்ளது. எவ்வாறாயினும் அத்தகைய உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக சாரதியை அல்லது சாரதிப் படிகளை வழங்கப்பட வேண்டியிருக்கவில்லை		
		(i) கமபனியானது முப்பத்தியேழு ஊழியர்களிற்கு ரூபா 201,600 முதல் ரூபா 561,960 வரையான மாதாந்த போக்கு வரத்துப் படிகளை வழங்கியிருந்தது. இதன்படி சுற்றறிக்கை ஏப்பாறுகளின் படி அனுமதிக்கப்பட ரூபா 50,000 எல்லையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 93,462,240 ஆன தொக மேலதிகமாக செலுத்தப்பட்டது. மேலும் மீளாய்வாண்டில் ரூபா 2,400,000 மொத்தமான மாதந்த சாரதி படி செலுத்தப்பட்டது.	கம்பனியானது எரிபொருள் படிகளை பற்றி அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றது. ஆனால், கம்பனியானது பேணப்பட்ட வாகனங்கள் எந்தவொரு ஊழியர் வகுதிகளிற்காகவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என விளக்கப்பட்டது. வாகனம் படிகள் மற்றும் எரிபொருள் படிக் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வேலைத் தொகுதி மற்றும் கடமைப் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தது. சில ஊழியர்கள் எரிபொருள் ஒதுக்கீட்டுடன் கம்பனி பேணும் வாகங்களை பெறுகின்றது. போட்டிச் சந்தைவிலை வீத அடிப்படையில் படிக் கொடுப்பனவுகளை	கம்பனியானது இது தொடர்பில் பிரயோகிகக்கூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டியதுடன் எந்தவொரு அவசர விலகல் தேவைகளிற்காக நிதி அமைச்சின் முன்னனுமதி பெறப்பட வேண்டும்.

	கம்பனி சபை தீர்மானித்தது. 2024 சனவரி 16 இல் வாகன மற்றும் சாரதிப் படிகள் அனுமதிக்கப்பட்டன.	
(ii) கம்பனியானது போக்குவரத்துப் படிக்கு தகுதிபெற்றிராக 142 ஊழியர்களிற்கு ரூபா 73,699,200 மொத்தமான மாதாந்த போக்குவரத்து படிகளை வழங்கியிருந்தது.	கம்பனியானது எரிபொருள் படிகளை பற்றி அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றது. ஆனால், கம்பனியானது பேணப்பட்ட வாகனங்கள் எந்தவொரு ஊழியர் வகுதிகளிற்காகவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என விளக்கப்பட்டது. வாகனம் படிகள் மற்றும் எரிபொருள் படிக் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வேலைத் தொகுதி மற்றும் கடமைப் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தது. சில ஊழியர்கள் எரிபொருள் ஒதுக்கீட்டுடன் கம்பனி பேணும் வாகங்களை பெறுகின்றது. போட்டிச் சந்தைவிலை வீத அடிப்படையில் படிக் கொடுப்பனவுகளை கம்பனி சபை தீர்மானித்தது. 2024 சனவரி 16 இல் வாகன மற்றும் சாரதிப் படிகள் அனுமதிக்கப்பட்டன.	கம்பனியானது இது தொடர்பில் பிரயோகிகக்ககூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டியதுடன் எந்தவொரு அவசர விலகல் தேவைகளற்காக நிதி அமைச்சின் முன்னனுமதி பெறப்பட வேண்டும்.
(iii) மேற்குறிப்பிட்ட எரிபொருள், போக்கு வரத்து மற்றும் சாரதிப் படிகளிற்கு மேலாக கமபனியானது 2024 ஆம் ஆண்டின் போது ஏழு ஊழியர்களிற்கு ரூபா 43,880,400 தொகையான வட்டி அல்லாத வாகனக் கடன்களை வழங்கியிருந்தது. மேலும், அறவிடப் வேண்டிய கடன் முதலில் 50 சதவீதம் மாத்திரமே உரிய	வரையறுத்த செல் காஸ் லங்கா கம்பனி மற்றும் வரையறுத்த செல் காஸ் ரேமினல் லங்கா (தனியார்) கம்பனியால் 2007 இல் அறிமுகப் படுத்தப்பட்ட கார் கொள்கை செயற்பாட்டு மற்றும் கட்டமைப்பு தேவைகளுடன் இணங்கிய பல திருத்தங்கள் செய்றபாட்டில் உள்ளன. அதிகமான அண்மைய நாளது வரையாக்கல் 2020 ஆகஸ்ட் 20 இல்	கம்பனியானது இது தொடர்பில் பிரயோகிகக்ககூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டியதுடன் எந்தவொரு அவசர விலகல் தேவைகளிற்காக நிதி அமைச்சின் முன்னனுமதி பெறப்பட வேண்டும்.

		ஊழியரிடமிருந்தான வட்டியல்லாக் கடனான கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதேநேரம் மிகுதி 50 சதவீதம் கம்பனியின் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது	அமுலாக்கப்பட்டதுடன் மேலும் திருத்தங்கள் பணிப்பாளர் சபை அனுமதியுடன் 2024 செப்தெம்பர் 14 இல் செய்யப்பட்டன. தகுதியற்ற, காலாவதியான கொள்கை மற்றும் போட்டித் தன்மை வாகன அனுமதிகளின் தகுதியின் போன்ற அத்தகைய விடயங்களை அடிப்படையாக கொண்டு மூலக் கொள்கை, பரிந்துரைத்த நாளது வரையாக்கலை உப குழு மீளாய்வு செய்தது. இந்த கொள்கை கடன் தள்ளுபடியின் 50 சவீதத்துடன் கம்பனி ஒதுக்கிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு தகுதியுடைய ஊழியரிற்காக ஒரு தடவை கடன் வசதியை உள்ளடக்கியது. இந்த கொள்கையானது மூன்று ஆண்டு பயன்பாட்டின் பினனர் அதன் சந்தை விலை பெறுமதியின் 50 சதவீதத்தில் அதே வாகனம் கொள்வனவு செய்யப்படுகின்றது. 2024 செப்தெம்பர் 11 இல் சபை அனுமதித்த கார் கொள்கை திருத்தங்கள் மற்றும் அவை 2025 சனவரி 2 இலிருந்து செயற்பட இருந்தது.	
(உ)	2024 திசெம்பர் 23 ஆந் திகதிய PED 03/2024 ஆம் இலக்க போது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் 1.2(II) ஆம் பந்தியின் பிரகாரம், வர்த்தக செயற்பாடுகள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரச உடமை யாக்கப்பட்ட கம்பனிகள் 2023 ஆம் ஆண்டின் போது உழைத்த இலாபங்கள் மேற்குறித சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக	கம்பனி வருமானத்துடன் மிகையூதிய தொகைகள் தீர்மானிக்கப்பட்டதுடன் இது பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது சகல உத்தியோகத்தர் களுக்குமான திசெம்பர் மிகையூதியம் கம்பனியை செல் காஸ் செய்கின்ற முகாமை	கம்பனியானது SOEs இற்குள் ஒழுங்கற்ற பேணலிற்கு பிரயோகிகக்ககூடிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். இது அவசியமாக உள்ளதாயின்

	ஒரு ஊழியரிற்கு ரூபா 20,000 வீதம் மிகையூதியத்தை பரிந்துரைக்க முடியும். கம்பனியானது ஆண்டு இறுதியில ஊழியர் ஒருவரிற்கு ரூபா 100,000 மிகையூதியத்தை ஆண்டிறுதி இலாபத்தில். செய்யப்பட்டது. பொது திறைசேரியின் அனுமதியில்லாமல் 2024 சனவரியில் சராசரி செயலாற்றலிற்கு மேல் ரூபா 333,230 செலுத்தப்பட்டது. ரூபா 14,252,500 மொத்த தொகை இலாப மிகையாக ஆண்டு இறுதியின் போது அனுமதிக்கப்பட்டிருந்தது.	செய்கிறதிலிருந்த செலுத்த்பட்டது. கம்பனியானது சகல உத்தியொகத்தருக்கும் சமமாக மொத்த வரியை செலுத்தப்பட்டது (கமபனியால் இறுத்த வரி) எவ்வாறாயினும், இந்த ஆண்டு ரூபா 500,000 ஐ விட குறைவாக உழைககின்ற உத்தியோகத்தர்களிற்கு மாத்திரம் கொடுப்பனவு செலுத்தப்பட்டதுடன் உழகைக்கும் போது செலுத்தும் வரியை கொடுபபனவுகள் செய்யப்பட்டது. செய்யப்பட்ட மிகையூதிய கொடுப்பனவுகள் 2024 திசெம்பர் 24 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் செய்யப்பட்டது. .	எந்தவொரு விலகல்களிற்காகவும் வேண்டப்பட்ட நிதி அமைச்சிடமிருந்து முன்னனுமதி பெறுவதற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
(ஊ) 2015 மே 25 ஆந் திகதிய PED 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை	உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக பெறப்படுகின்ற உபகரணங்கள் மற்றும் உபபாகங்கள், தொலைபேசி, தனிப்பட்ட மொபைல் போன்கள் அல்லது இன்ரநெட் வசதிகள் கொள்வனவு செய்கின்ற கிரயங்கள் தனிப்பட்ட ரீதியில் உத்தியோகத்தரால் இறுக்கப்பட வேண்டும். அத்தகைய உபகரணங்களிற்கான செலவினம் உரிய தொழில் முயற்சிகளால் மீளளிக்க வேண்டியதில்லை. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட சுற்றிக்கைக்கு முரணாக கம்பனியானது 2024 ஆம் ஆண்டில் மொபைல் போன்கள் வாங்குவதற்கு 48 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 3,470,286 தொகை செலுத்தியிருந்தது.	மொபைல் போன்கள் அவர்களுடைய பணியின் அடிப்படையில் அலுவலக பயன்பாட்டிற்காக குறிப்பிட்ட உத்தி யோகத்தர்களிற்கு வழங்கப்பட்டது. போன்கள் அன்றோட் அல்லது IOS கருவிகளாக இருக்க வேண்டியதுடன். திருத்தங்கள் நிகழும் போது பயன்படுத்தப் படுவதுடன் கடமையற்ற நேரங்களின் பொது நிறுத்திவைக்க அனுமதிக்கப்பட்டது. 2006 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் வரையறுத்த லிற்றோ காஸ் கம்களி ஒன்றிணைக்கப்பட்டதுடன் தொலைபேசி செலவினை குறைப்பதற்கு டயலொக் அக்சிற்றா PLC இடமிருந்து மொபைல் போன்கள் பெறப்பட்டது.	கம்பனியானது பிரயோகிக்கக்கூடிய சுற்றறிக்கை வேண்டுகைகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் இது அவசியமாக உள்ளதாயின் எந்தவொரு விலகல்களிற்காகவும் வேண்டப்பட்ட நிதி அமைச்சிடமிருந்து முன்னனுமதி பெறப்பட வேண்டும்.

(எ)	2024 பெப்ரவரி 28 ஆந் திகதிய PED 1/2024 ஆம் இலக்க போது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை	சுற்றறிக்கை இல. 14.1 இன் பிரகாரம் விழா நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவின்களும் தவிர்க்கபட வேண்டியிருந்தது. இந்த நெறிப்படுத்தலுக்கு முரணாக கம்பனியானது சனல் மதிப்பீட்டு விழாவிற்காக ரூபா 33.5 மில்லியன் செலவினம் ஏற்பட்டது. சனல் வழங்கல் விழாவில் பங்குபற்றுகின்ற நோக்கம் கம்பனியினுடைய சந்தை பெறுமதி உயர்த்துவதற்காகவே இருந்ததென குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், கம்பனியினுடைய பங்குந் சந்தைப் பெறுமதி கடந்த இரண்டு ஆண்டுகளில் 86.9 சதவீதத்தலிருந்து 80 சதவீதத்திற்கு குறைவடைந்தது. இந்த வளர்ச்சி வினைத்திறனான சந்தைப்படுத்தல் உபாயம் மற்றும் அதததகைய கணிசமான முதலீட்டின் மீதான வருமானம் தொடர்பில் கவலைகொள்கின்றது.	லிற்றோ பங்குந் சந்தைப் பெறுமதி 2021 இல் 83 சதவீதமாக இருந்தது 2022 - 2023 வரையான பொருளாதார சிக்கலிற்கு முன்னர் இது 2022 இல் 86.9 சதவீதம் மற்றும் 2023 இல் 81.8 சதவீத விற்பனையில் போட்டியாளர்- உயர் நிலையிலிருந்து விபரங்களை வழங்காமையால் இந்த தொகைகள் மிகையான இருக்கும். லிற்றோ கம்பனி அண்ணளவா 80 சதவீத சராசரி சந்தை பெறுமதியை பேணுகின்றது. சேவை தொடக்க தரமுயர்த்தல்? விற்பனை விளம்பரம், சந்தைப்படுத்தல் முயற்சிகள் போன்ற மையப்படுத்திய சந்தை முதலீடு மற்றும் செலவிம் என்பவற்றிலிருந்து பங்குச் சந்தையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. வருடாந்த சனல் வழங்கல் விழா சனலின் செயலாற்றலை நியமப்படுத்துற்கு நோக்கம் முயற்சியாக உள்ளது. விநியோகத்தர் புள்ளியிட்ட KPIs ஐ செய்வதற்கு தேவைப்பட்ட சகல செலவிங்களையும் விநியோகத்தர்களால் முழுமையாக இறுக்கப்பட்டது. யூன் மாதத்தில் உள்ளவாறு 2025 ஆம் ஆண்டில் அந்த முதலீகள் செயற்பாட்டிலுள்ள மேலதிக அபிவிரத்திகளுடன் ரூபா 560 மில்லியனாகும். வியாபார வளர்சசி	கம்பனியானது பிரயோகிகக்ககூடிய சுற்றறிக்கை வேண்டுகைகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் இது அவசியமாக உள்ளதாயின் எந்தவொரு விலகல்களிற்காகவும் வேண்டப்பட்ட நிதி அமைச்சிடமிருந்து முன்னனுமதி பெறப்பட வேண்டும்.

		உபாயத்தின் பிரகாம், சனல் வலையமைப்பால் செயற்படுத்தபப்ட ஆபத்தான பணியை வழங்கியிருந்தது. சனல் வழங்கல் விழா அவசியமாவும், உபாய முயற்சியாகவும் உள்ளது செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் நிலைபேறான வியாபார என்பவற்றிற்கு ஆதரவளிக்கிறது.

1.8. வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01 ஆம் சுற்றறிக்கை மற்றும் 2023 ஏப்ரல் 06 ஆந் திகதி SEC/2023/E/02 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணைாளர் நாயக சுற்றறிக்கை பிரகாரம் முற்பன தனிப்பட்ட வருமான வரி (APTT) கணிப்பிடும் போது கம்பனியானது மீளாய்வாண்டில் 70 ஊழியர்களிற்காக ரூபா 64.4 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டின் போது 71 ஊழியர்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 59 மில்லியன் மொத்தமான எரிபொருள் படி கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை .	தேசிய கணக்காய்வு அலுவலகத்தினுடைய முன்னைய அவதானிப்புக்களிற்கான பதிலில் முகாமைத்துவம் அத்தகைய கழிப்பனவுகளிற்காக பொருத்தமுடைய ஊழியர்களிற்காக 2025 ஏப்ரல் 01 இலிருந்து எரிபொருள் படிகள் மீது APPTT கழிப்பனவை அமுலாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது கடமை தொடர்பான வேலைகளிற்காக எரிபொருள் பயன்படுத்தும் ஊழியர் மீது கடுமையாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஏ்வாறாயினும், எரிபொருள் கிரய மீளளிப்புகளை மாத்திரம் செய்துள்ளது.	கம்பனியானது வரிப் பிரமாணங்களுடன் இணங்கியெபழுக வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,248.42 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிலுள்ள இலாபம் ரூபா 4,608.18 மில்லியனாகும். ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 2,359.76 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 2,181 மில்லியனால் ஒப்பந்தங்களிலிருந்தான வருமான வீழ்ச்சியே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக உள்ளது.

2.2. பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீதங்களுடன் முன்னைய இரண்டு (2) ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்ட மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன.

	தொகை ரூபா மில்லியன்			சதவீத மாற்றம்		
திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	**2024**	**2023**	**2022**	**2024**	**2023**	**2022**
வாடிக்கையாளர் ஒப்பந்தங்ளிலிருந்தான வருமானம்	88,756	90,937	79,982	-2%	14%	53%
விற்பனை கிரயங்கள்	82,390	81,292	72,225	1%	14%	21%
மொத்த இலாபம்	6,365	9,644	7,757	-34%	24%	207%
செயற்பாடுகளிலிருந்தான இலாபம் ∴ (நட்டம்)	2,822	5,974	4,575	-53%	31	-146%
நிதி வருமானம்	1,452	1,735	820	-16%	112%	197
நிதிச் செலவினம்	936	1,138	4,274	-18%	-73%	643
வருமான வரிச் செலவினம்	1,089	1,963	217	-44%	804%	-107%
ஆண்டிற்கான இலாபம்	2,248	4,608	904	-51%	409%	112%

2.3 விகிதப் பகுப்பாய்வுகள்

முன்னைய இரண்டு (02) ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு பிரதான வீதங்கள் பின்வருமாறு உள்ளன.

விகிதங்கள்	**2024**	**2023**	**2022**
இலாபதன்மை விகிதங்கள்			
மொத்த இலாப வீதம்	7%	11%	10%
தேறிய இலாப வீதம் (PBT)	3%	7%	1.40%
தேறிய இலாப வீதம் (PAT)	3%	5%	1%
ஈடுபடுத்திய மூலதன வருவாய் வீதம் (ROCE)	11%	23%	4%
உரிமை மூலதன வருமாய்	0.20%	0.44%	0.10%
சொத்துக்கள் மீதான வருவாய் (தடவைகள்)	0.095	0.20	0.039

திரவத்தன்மை விகிதங்கள்			
நடைமுறை விகிதம் (தடவைகள்)	4	3.15	4.20
விரைவு விகிதம் (தடவைகள்)	3.27	2.23	2.93
அந்நிய செலவாணி விகிதங்கள்			
வட்டி மேவுகை விகிதம்	2.57	4.77	-0.71
வினைத்திறன் விகிதங்கள்			
சொத்து சுழற்சி (தடவைகள்)	2.5	2.7	2.78
சந்தை பெறுமதி விகிதம்			
ஒரு பங்கிற்கான உழைப்புகள்	62.46	128.01	25.13
ஒரு பங்கிற்கான புத்தக பெறுமதி	455.41	414.56	305.54

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	8,000 மெற்றிக் தொன் காஸ் களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சிய வசதிகள் மற்றும் அண்ணளவாக 400 மெற்றிக் தொனை களஞ்சிய வசதிகள் வரையறுத்த லிற்றோ காஸ் லங்கா சொந்தமான முறையே கரவெலப்பிட்ட களஞ்சிய கட்டிட தொகுதி மற்றும் மாபிமா களஞ்சிய கட்டிடத் தொகுதியில் இருந்தது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திலிருந்து (LPG) கொள்வனவு செய்யப்பட்ட திரவத் தன்மையுடைய பெற்றோலிய லிற்றோ காஸ் மாபிமா கட்டிட தொகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் கைத்தொழில் துறைககு விவிக்கப்பட்டது. கம்பனியினுடை இருககின்ற கயஞ்விய வசதிகள் வரையறுக்கப்பட்டிருந்தமையால் கம்பனியானது ஒரு தடவை பெருமளவு காஸ் கொள்வனவு செய்வதற்கு இயலாதிருந்தது.	உங்களுடைய அவதானிப்புகள் கீழே குறிப்பிடப்படுகின்றன. நான் கம்பனியானது ஏற்கனவே இயலளவை விரிவாக்கும் நடைமுறையை தொடங்கியிருந்தது என உங்களுடைய கவனத்தை ஈர்க்கின்றேன். தற்பொது நாங்கள் சாத்திய வள கற்கைக்காக மற்றும் இரண்டையும் ஆலோசனை தெரிவு கேள்வியுடன் செயற்படுகின்றது. நாங்கள் விரிவாக்கல் தேவை தொடர்பில் CBM இற்காக துறைமுக அதிகார சபையிடமிருந்து தெளிவாக்கல் பெறப்பட வேண்டியிருந்தது.	தேவையான களஞ்சிய வசதி மதிப்பீடு முகாமையால் மேற்கொள்ளப்பட வேணட்டும் அதன் பின்னர் பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு கம்பனியில் கிடைத்த தொடர்ச்சியான களஞ்சிய வசதி வழங்கல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதி என்பன விருத்தி செய்யப்பட வேண்டும். .

ஆதலால் உலக சந்தையிலிருந்து குறைந்த விலைகளின் செல்வாக்கு செலுத்துவதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது.		
(ஆ) கெரவெலப்பிட்டியாவில் கம்பனியினுடைய CBM வசதி 3,500-5,000 மெற்றிக் தொன் களஞ்சிய இயலளவுடைய சிறிய அளவு கம்பல்களை கையாள்வதற்கு மாத்திரம் போதியதாக இருந்தது. (அண்ணளவாக ஆகக் கூடிய 4,000 மெறறிக் தொன் காஸ் காவிச் செல்லும் கப்பல் இயலளவு எவ்வாறாயினும் தற்போது உலக காஸ் போக்குவரத்தில் 20,000-100,000 மெற்றிக்தொன் பெரிய அளவு கம்பல்களை பயன்படுத்தப்படுகின்றன. கப்பனியால் உடமையாக்கப்பட்ட வரையறுத்த மிதவை வசதி காரணமாக குறைந்த விலையில் பெரியளவு காஸ் கொள்வனவு செய்வதற்கு கம்பனியின் இயலுமை வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த மிதவை வசதிக்கு பொருத்தமான சிறிய கப்பல்கள் தற்கொது காஸ் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. மேலும், வரையறுத்த காஸ் ஏற்றுதல் காரணமாக கம்பனி பெருமளவான செலவினை ஏற்கவேண்டியிருந்தது.	நீங்கள் குறிப்பிடுகின்ற கீழேயுள்ள அவதானிப்புகள் கம்பனி இயலளவை விரிவாக்கும் நடைமுறையை ஏற்கனவே தொடங்கியிருந்தது என நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். தற்பொது நாங்கள் சாத்தியவள கற்கை மற்றும் அதற்கு இணையானவற்றில் கேள்வித் தெரிவை ஆலோசனையாளருடன் செயற்படுத்துகின்றொம் நாங்கள் CBM தொடர்பான விரிவாக்கல் வேண்டுகைக்காக இலங்கை துறைமுக அதிகாரசபை இடமிருந்து தெளிவாக்கலைப் பெற்றிருந்தோம்.	கடந்த கால களஞ்சிய பயன்பாடு தொடர்பான தகவல்கள் களஞ்சிய இயலளவை தரமுயர்த்தும் நோக்கத்திற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க PED சுற்றறிக்கையால் வழங்கப்பட்ட அரசு உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டல் பிரகாரம் சகல பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய பௌதீக சொத்துக்கள் மற்றும் மனித வளங்கள் உபாய திட்டங்களின் கீழ் பணப்பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு முறையான முறைமை மற்றும் நடைமுறைகளுடன் பொருளாதார நடவடிக்கைக்குள் எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 992,745,000 பெறுமதியில் ஒருகொடவத்தையிலுள்ள 509.1 பேர்ச்	கம்பனியானது ரூபா 992,745,000 பெறுமதியில் ஒருகொடவத்தையிலுள்ள 509.1 போச் காணிகள் 2024 இல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. இந்த அத்துமீறிய பயன்படுத்தலை தடுப்பதற்கு தெளிவாக்கப் பட்டிருந்ததுடன் அதனை பயன்படுதும் சந்தர்ப்பத்திற்கு திட்டத்துடனான உபாய நடவடிக்கைகளை கருத்திற்கொள்கின்றது.	முறையாக தீர்மானத்தை பெறுவதற்கு பணிப்பாளர் சபைக்கு காணியின் தகவல் முன்வைக்கப்பட வேண்டும்.

காணிகள் குறித்த நோகக்கத்திற்காக பயன்படுத்தப்படாது இருந்தது. இது 2012 இலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தது.

3.3 கொள்வனவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் 2006 இன் 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தலிற்கமைய கொள்வனவு நிறுவனம் பிரதான கொள்னவு திட்டம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு திட்டத்திற்கான விரிவான கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கொள்வனவு கால அட்டவணையும் அதன் தொடக்கத்திலிருந்து பூர்த்தியாக்கும் வரை ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையும் நடவடிககை எடுக்கும் நோக்கில் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது மீளாய்வாண்டின் போது ரூபா 1,918 மில்லியன் பெறுமதியான 66 கொள்வனவு நடவடிக்கைகளிற்காக சொல்லப்பட்ட கொள்வனவு திட்டங்களை கொள்வனவு காலப் பட்டியலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனியானது ஒவ்வொரு கொள்வனவு செயலின் படிமுறைகளை குறிப்பிடுகின்ற நொக்கில் காலக் கிரமத்தில் கொள்வனவு பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் குழுவால் வழங்கப்பட்ட அரசு உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான (SOEs) செயற்பாட்டுக் கைநூலின் 3.1 மற்றும் 3.2(i) ஆம் பிரிவுகளின் பிரகாரம் கம்பனியானது அவர்களுடைய ஆளணி, ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR) மற்றும் வேதனங்களிற்காக பொது திறைசேரியின் அனுமதி பெற்றிருக்கவில்லை.	அரசு உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டுக் கைநூலின் ஆட்சேர்பு முறை மற்றும் சம்பள கட்டமைப்பு உள்ளடங்க மனித வள முகாமைத்துவம் மீது தீர்மானம் எடுப்பதற்கு SOEs அனுமதிக்கின்ற விலக்கழிப்புகள் வழங்கியிருந்தது. முகாமைததுவ திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு விபரங்களை சமர்ப்பித்திருந்ததுடன் 2024 சனவரி 16 இல் சம்பள மீளமைப்பிற்காக சபை அனுமதி வழங்கப்பட்டிருந்தது.	கமபனியானது அவர்களுடை SOR மற்றும் அவர்களுடய வேதனங்களிற்காக பொது திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டும்.

(ஆ) 2022 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 06/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் IV ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்கள் 60 வயதினை அடையயும் பொது ஓய்வுபெற முடியும். எவ்வாறாயினும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதினை விஞ்சி இருந்த பதினொரு (11) ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர் கம்பனியானது 2023 இல் அந்த உத்தியோகத்தர்களிற்காக அடிப்படை சமபளங்கள், போக்குவரத்தப் படிகள், மிகையூதியங்கள் மற்றும் ஏனைய நலன்களாக ரூபா 32,576,585 உம். 2024 உமான ரூபா 40,580,612 மொத்தமான கொடுப்பனவுகள் ஏற்பட்டது. மேலும், கொள்வனவு பணிப்பாளர், சிரேஸ்ட முகாமையாளர் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் உள்ளடங்கலாக பல பிரதான நிரந்தர பதவிகள் உத்தியோகத்தர்களாக சேர்க்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டது. கமபனியினுடைய செயற்பாட்டுச் செயலாற்றல் மற்றும் நீண்டகால நிலைபேறு தொடர்பில் தேவையற்ற பிரச்சனைகளை உருவாக்கும் என அவதானிக்கப்பட்டது.	சகல லிற்றோ காஸ் உத்தியோகததர்களும் அவர்களுடை வெலைக்கமர்த்தலின் மூல ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர்கள் வயதினை அடைந்திருந்ததுடன் அவர்களுடைய நிரந்தர ஊழியர் நிலை 60 வயதின் பின்னரும் அதே நியனத்தில் தொடருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர் அதன் பின்னர் வேலை தேவையை கருத்திற்கொண்டு கம்பனியானது முன்னைய வேலைக்கமர்த்தப்பட்ட அதே நிபந்தனைகளை சலுகை இல்லாமல் குறித்த காலப் பகுதிக்காக புதிய நிலையான நிபந்தனை ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது. கம்பனியின் வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர்களிற்கு செயற்பாடுகளை தொடருவதற்காக வேண்டப்பட்டனர். இந்த தீர்மானம் 2022/08/02 ஆந் திகதிய திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட கடிதம் மூலம் ஆதரவாக இருந்ததுடன் பின்னர் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு 2023/03/20 ஆந் திகதிய SOERU சபை அனுமதி பெறப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டியதுடன் உத்தியோகத்தர் நிலை பற்றிய வேண்டுகை மற்றும் தகவல் முறையான தீர்மானம் எடுப்பதற்கு நெறிப்படுத்தல் சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

4.1 ஆண்டறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கைநூலின் 6.6 ஆம் பிரிவிற்கமைய கம்பனியின் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஐந்து மாதங்களிற்குள் (5) பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் வரைவு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் அறுபது (60) நாட்களிற்குள் கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டும்.	கம்பனியின் 2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை SLIC மற்றும் நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டது. 2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். 2024 இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதிக்காக 2025 ஏப்ரல் 11 இல் அரசாங்க கணக்காய்வாளருக்கு	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், கம்பனியானது 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

4.2 கணக்காய்வுக் குழு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் குழுவால் வழங்கப்பட்ட அரசு உடமையாக்க்பபட்ட முயற்சிகளிற்கான (SOEs) செயற்பாட்டுக் கைநூலின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழு குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவையாவது கூட்டப்பட்டு அதன்பின்னர் எடுக்கின்ற சரியான அளவீடுகளிற்கு வசதியளிப்பதற்கு கூட்டக் குறிப்பகளுடன் சேர்த்து விரைவில் சபைக்கு அதன் பரிந்துரையை அறிக்கையிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2024 ஆம் அண்டிற்காக இரண்டு கணக்காய்வு குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தது.	அவதானிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கம்பனியானது கைநூலின் 4.2 ஆம் பிரிவின் கீழான வேண்டுகையை கவனத்திற்கு எடுத்திருந்தது. இதன்படி, குறைந்தது நான்கு கணக்காய்வு குழுவின் கூட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுடன் இணங்குகையில் இரண்டு கம்பனிகளிற்காகவும் 2025 ஆம் ஆண்டின் பொது நடை பெற்றதை உறுதிப்படுத்துவதற்கு திட்டமொன்றை கொண்டிருந்தது.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் குழுவால் வழங்கப்பட்ட அரசு உடமையாக்க்பபட்ட முயற்சிகளிற்கான (SOEs) செயற்பாட்டுக் கைநூலின் 4.2(i) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு குழுவானது கணக்காய்வு குழுச் சாசனம் இன்மையால் பின்னிணைப்பு IV இல் உள்ள சாசன மாதிரி சபை அனுமதியுடன் பின்பற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், கணக்காய்வு குழு சாசனம் விருத்தி செய்யப்பட்டு அல்லது மாதிரி சாசனம் சபை அனுமதியுடன் பின்பற்றப்பட்டு இருந்ததென அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், முன்னனி வகிக்கும் அதிகாரம் மற்றும் சுதந்திரம் இன்மையால் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளின் பணி மற்றும் பொறுப்புகள்	அவதானிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்பொது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு சாசனம் தயாரிக்கப்படுகின்றதுடன் விவைில் இறுதியாக்கப்படும். பூர்த்தியாக்கும் பொது கைநூலின் 4.2(i) ஆம் பிரிவின் வேண்டுகையுடன் இணங்குவதை உறுதிப்படுத்தவதற்கும் ஆளுகை கட்டமைப்பு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு சூழலை வலுப்படுத்துவதற்கும் இது சபை அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும்.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

தெளிவாக்காதிருந்தது. இது உள்ளக கட்டுப்பாட்டு முறைமையிலுள்ள நலிவைக் காட்டுகின்றது.